புதுச்சேரி அரசு போக்குவரத்துத் துறை
அரசு வாகன பணிமனை, சாரம், புதுச்சேரி.

## மின்னனு ஏலம் கோருவதற்கான நிபந்தனைகள்

**உபயோகப்படுத்தாத இரண்டு மற்றும் நான்கு சக்கர மற்றும் கனரக வாகனங்களின் உதரிபாகங்களை ஏலம் கோருவதற்கான நிபந்தனைகள்**

1. On behalf of the President of India, "புதுச்சேரி அரசு வாகன பணிமனையில், உபயோகப்படுத்தாத இரண்டு மற்றும் நான்கு சக்கர மற்றும் கனரக வாகனங்களின் உதரிபாகங்களை "உள்ளது உள்ளபடி நிலையில்" **ஓரே லாட்டாக, https://eauction.gov.in** என்ற இணையதளத்தின் வழியாக **29.01.2021 நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை** அல்லது ஏலம் தொடரும் வரை நடத்தப்படுகிறது.

2 .ஏலம் கேட்க விருப்பமுடையவர்கள் https://eauction.gov.in என்ற இணையதளத்தில் சென்று தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளலாம். மேலும் வாகன உதிரி பாகங்களின் விவரங்கள் மற்றும் நிபந்தனைகள் https://py.gov.in. , https://transport.py.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஏலம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேதி மற்றும் நேரத்தில் ஆரம்பிக்கப்படும். ஏலத்தின ஆரம்ப தொகைக்கு மேற்கொண்டு தங்கள் ஏலத்தொகையை ரு.500/- மடங்காக ஏலக் கேள்விகள் இருக்கவேண்டும்

3. ஏலத்தில் கலந்துகொள்பவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள சான்றிதழ்களை ONLINE மூலமாக **27.01.2021** நேரம் மாலை 4.00 மணிக்கு முன்பாக சமர்பிக்கவேண்டும். ஏலதார் கீழே கொடுக்கப்பட்டுள்ள சான்றிதழ்களையும், இரண்டு அசல் கேட்புவரைவு ஓலைகளையும் (கட்டாய பிணையத்தொகை (EMD) ரு.20,000/- & விண்ணப்பத்தொகை: (ரு.315/-) நேரடியாக அரசு வாகன பணிமனை, சாரம், புதுச்சேரி- 605 013. அலுவலகதில் **27.01.2021**.அன்று மாலை 4.00 மணிக்குள் சமர்பிக்க வேண்டும். **28.01.2021** அன்று சான்றிதழ்களை சரிபார்த்தபின்னரே ஏலம் கேட்க விரும்புவோர் ஏலம் கேட்க அனுமதிக்கபடுவார்கள்.
i) உபயோகத்தில் உள்ள GST/Sales Tax சான்றிதழ்
ii) பான் கார்டு
iii) கட்டாய பிணையத்தொகை (EMD) (ரு.20,000.-த்தை (ரூபாய் இருபதாயிரம்) ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் மூலமாக **Pay Drawing and Disbursing Officer, Government Automobile Workshop, Puducherry payable at Puducherry** என்று குறிப்பிட்டு கேட்புவரைவு ஓலை (Demand Draft), **என்று** எடுக்கவேண்டும். கேட்புவரைவு ஓலை எடுத்தவர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ளலாம். பதிவு பெற்ற ஏலதார்கள் அவர்களுடைய scanned copy வரைவு ஓலை மற்றும் அதற்கு உண்டான documents-ஐ பதிவேற்றம் மூலமாக..**27.01.2021**.அன்று மாலை 4.00 மணிக்குள் சமர்பிக்க வேண்டும்.
iv) ஏலத்திற்காண விண்ணப்பத்தொகை: (ரு.315/- (G.S.T உள்பட) ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் மூலமாக **Pay Drawing and Disbursing Officer, Government Automobile Workshop, Puducherry payable at Puducherry** என்று குறிப்பிட்டு கேட்புவரைவு ஓலை (Demand Draft), எடுக்கவேண்டும்.

4. ஏற்புடைய ஏலதாரர் மேலே கூறியிருந்த பொருட்களை அலுவலக நேரத்தில் அரசு பணிமனை, சாரம் புதுச்சேரி, **20.01.2021 to 22.01.2021 காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி** வரை பார்வையிடலாம். ஏலத் தேதி ஏதேனும் காரணங்களுக்காக பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டால் மறு அரசு வேலை நடக்கும் நாளில் தன்னிச்சையாக தள்ளி வைக்கப்படும இது சம்மந்தமாக எந்த அறிவிப்பும் தங்களுக்கு தெரிவிக்கபடமாட்டாது.

5. இந்த ஏலத்தில் கலந்து விரும்பும் அனைவரும் மின்னனு கையெழுத்து சான்றிதழ் (Digital Signature Certificate) கட்டாயமாக வைத்திருக்கவேண்டும்.இதற்குண்டாண இலவச பயிற்சி தேவைபடுபவர்கள் தலைமைசெயலகத்தில் உள்ள CVO, E-procurement cell தெரிந்துகொள்ளலாம்.
Help Desk No. 0413 – 2220225 / 18002337315 ( Toll free).

6. ஏலதாரர்கள் தங்கள் விருப்பத்தொகையை இணையதள மூலமாக பதிவு. செய்யலாம். ஏலதாரர் தன்னுடைய முகவரி, தொலைபேசி மற்றும் கைபேசி எண்களை ID Proof வுடன் குறிப்பிட வேண்டும்

7. இணையதளத்திற்காக அளிக்கப்படும் முகவர் உபயோகிப்பவர் பெயர்(User ID) மற்றும் ரகசியபதிவு வார்த்தை (password) விண்ணப்பதாரரின் பொறுப்பில் பாதுகாக்கப்பட வேண்டும். ஏலதாரர்களின் விபரங்கள் ரகசியமாக வைக்கப்படும். ஏலத்தொகை மட்டும் வெளியிடப்படும். ஏலத்தில் கலந்து கொள்ள விரும்பும் ஏலதாரர் தங்களுடைய ஏலத்தொகையை குறிப்பிடப்பட்டுள்ள தேதி மற்றும் நேரத்தில் உபயோகிப்பவர் பெயர் மற்றும் ரகசிய பதிவு வார்த்தையை பயன்படுத்தி இணையதளம் மூலமாக சென்று ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.

8. துணைபோக்குவரத்து ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் (பொறுப்பு), அரசு பணிமனை, போக்குவரத்து துறை, புதுச்சேரி, அவர்கள் ஏலத்தில் கேட்டப்படும் அதிகப்பட்ச தொகை ஏற்றுக் கொள்ளப்பட்டு வெற்றி பெற்ற ஏலதாரருக்கு, ஏலம் முடிந்த பின் அறிவிக்கப்படும்.

9. வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு (except the second highest bidder) பிணையத்தொகைக்கான அவர்களுடைய வரவு காசோலையை மறுநாள் திருப்பித்தரப்படும். ஏலத்தில் வெற்றி பெறும் பட்சத்தில் அவர்கள் செலுத்த வேண்டிய முழு தொகையில் பிணையத்தொகையை ஈடு செய்து மீதித் தொகையை செலுத்த வேண்டும்.

10. வெற்றி பெற்ற ஏலதாரர் ஏலத்தொகை முழுவதையும் 3 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அப்படி செலுத்தத்தவறும் பட்சத்தில் அவருடைய பிணையத்தொகைக்கான வரைவு ஓலையை இழக்க நேரிடும். மேலும் அவருக்கு அடுத்தப்படியாக அதிகம் கேட்டிருந்த ஏலதாரருக்கு தகவல் கொடுக்கப்பட்டு அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படும். தகவல் கொடுக்கப்பட்ட ஏலதாரர் 3 தினங்களுக்குள் அந்த முதல் ஏலதாரர் வெற்றி பெற்ற ஏலத்தொகை முழு தொகையையும் செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்.

11. .வெற்றி பெற்ற ஏலதாரர் ஏலத்தில் எடுத்த பொருட்களை வேறு ஒரு நபருக்கு மாற்றக்கூடாது. ஏலத்தில் எடுத்த அனைத்து பொருட்களையும் எடுத்து Gate Pass பெற்று செல்லவும். ஏலதாரர் ஏலம் சம்மந்தப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் கையொப்பம் இட வேண்டும்..ஏலம் விடப்பட்ட பொருட்களின் பாதுகாப்பு மற்றும் எந்த வித இழப்பிற்கும் இந்த அலுவலகம் பொறுப்பேற்காது

12. ஏலத்தில் எடுத்த பொருட்களை வெற்றி பெற்ற ஏலதாரர் ஏலத்தொகைகையை செலுத்தியவுடன் 24 மணி நேரத்திற்குள் தன் சொந்த செலவிலேயே பொருட்களை எடுத்துச் செல்லவும். ஏலம் முடிந்த பின் பொருட்களின் நிலை மற்றும் மதிப்பு பற்றி எந்த கருத்தையும் அதன்பின் ஏற்றுக் கொள்ள முடியாது.

13. இதற்குண்டான G.S.T தொகையை ஏலம் எடுத்த பொருட்களின் மதிப்பில் அந்த நேரத்தில் உள்ள விகிதாசாரத்தின்படி வசூலிக்கப்படும்..

14. ஏதாவது பிழைத்திருத்தம் (corrigendum) இருந்தால், அதை ஏலதாரர் தனக்கு உண்டான ஆவன்ங்களை பதிவேற்றம் செய்வதற்கு முன் அதை ஏற்றுக்கொண்டு பிறகு பதிவேற்றம் செய்ய வேண்டும். .

15. ஏலம் சம்பந்தமாக ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் அது புதுச்சேரி சட்ட அதிகாரத்திற்கு உட்பட்டதாகும்ஏலம்

16. ஏலம் தொடர்பாக ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் துணைபோக்குவரத்து ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் (பொறுப்பு), அரசு பணிமனை, போக்குவரத்து துறை, சாரம், புதுச்சேரி எடுக்கும் முடிவே இறுதியானது. இந்த ஏலத்தை ஏற்கவும், தள்ளுபடி செய்யவும், அல்லது மாற்றம் செய்யவும் எவ்வித காரணத்தை தெரியப்படுத்த வேண்டியதில்லை.

(S.சத்தியமூர்த்தி)
**துணைபோக்குவரத்து ஆணையர் மற்றும்**
**செயற்பொறியாளர் (பொறுப்பு)**
**அரசு வாகன பணிமனை, புதுச்சேரி**